[1982 மார்ச் 30

களை எல்லாம் விற்பனை செய்யக்கூடிய வகையிலேயும் — நாம் வெளிநாட்டுக்கு சென்றால் அங்கேயுள்ள பொருள்களை எப்படி விற்பனை செய்வது என்பதைச் சொல்லக்கூடிய வகையிலே நம்மையெல்லாம் அவர்கள் வரவேற்கிறார்கள் — அது போன்ற தமிழ் நாட்டு கலைப் பொருள்களை வருகிறவர்கள் வாங்கக்கூடிய வகையிலே எடுத்துச் சொல்ல அனுபவமிக்கவர். வர்களை நியமிக்க அரசு யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கேயே இருப்பவர்கள். அவர்கள் இங்கேயிருந்து வெளிநாடு செல்கிறபொழுது அனுபவம் பெற்றிருக்கிறார்கள். வெளிநாடுகளிலேயிருந்து இங்கே வருபவர்களுக்கு எந்த முறையிலே இவைகளைப்பற்றியெல்லாம் விளக்கம் அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு வாய்ப்பில்லை. இப்பொழுது வருகிற வெளிநாட்டுப் பயணிகளுக்கெல்லாம், நம்முடைய கலைப் பொருள்களை, இங்கே தயாரிக்கப்படுகிற பொருள்களை, இங்கே இருக்கிற கலைகளை எல்லாம் சொல்லி, அவர்களுக்காக அப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூரிலிருந்து இங்கே வருகின்றவர்களுக்கு டிக்கட் விற்பனைக்கு மட்டும் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அங்குள்ள மக்கள் இங்கே வருவதற்கு, அவர்கள் ஆசையைத் தூண்டுவதற்கு, வீடியோ டேப் மூலம், நம்முடைய கலைகள், மற்றைய இதர சிறந்த அம்சங்களைப் போட்டுக் காண்பிக்கவும் இந்த ஏஜன்சிகள் பயன்படுத்தப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சிகளை சுற்றுலாத் துறையிலேயே இப்பொழுது மேற்கொள்வதற்குப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

கொடைக்கானலில் மாவட்ட வனத்துறை அலுவலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 682—**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானலில் மாவட்ட வனத்துறை அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா ?

1982 மார்ச் 30]

(ஆ) ஆம் எனில் எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில் தற்பொழுது உள்ள மதுரை (தெற்கு), மதுரை (வடக்கு) என்ற இரு மாவட்ட வனத்துறை அலுவலகங்களைப் பிரித்து, மதுரை, திண்டுக்கல், கொடைக்கானல் என்ற மூன்று மாவட்ட வனத்துறை அலுவலகங்களை அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. வருகிற ஆண்டிலிருந்து செயல்படும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொடைக்கானல் வட்டாரத்திலே காட்டிலாகாவுக்கு அதிக வருமானம் வரக்கூடிய ஒரு நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். இதை உத்தேசித்தாவது அங்கு இன்னும் அதிக அலுவலகங்களை, மாவட்ட அலுவலகங்களை ஏற்படுத்தி, இன்னும் அதிக வருமானத்தைப் பெற அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இப்பொழுது கொடைக்கானலிலேயே தனியாக ஒரு மாவட்ட தனி அலுவலர் அதிகாரி—அலுவலகத்தை அரசு அமைக்க இருக்கிறது. இப்பொழுது கொடைக்கானலையே தலைமையிடமாகக் கொண்டுதான் அந்த டிஸ்டிரிக்ட் ஃபாரஸ்ட் ஆஃபீசர், அல்லது டிவிஷனல் ஃபாரஸ்ட் ஆஃபீசர் என்று அழைக்கப்படுகின்ற அந்த அதிகாரியின் செயலகம் அங்கே அமைக்க இருக்கிறோம். அது ஒரு முழுமையான அதிகாரம் பெற்ற வனத்துறை அலுவலகமாகச் செயல்பட இருக்கிறது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலிலே மாவட்ட வன அலுவலருடைய அலுவலகத்தை அமைக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நன்றி. அப்படி அமைக்கப்படும்போது, இப்பொழுது தேனியிலே ரேஞ்சாக இருக்கக் கூடியதைப் பிரித்து தேனி ரேஞ்ச், போடி ரேஞ்ச் என்ற இரண்டு பகுதியாகப் பிரிக்க அரசு ஏதும் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானல் என்பது மிகப் பெரிய வருவாய் வருகிற பகுதியாகவும், மரங்கள், காடுகள், நிறைந்த பகுதியாகவும் இருக்கிற காரணத்தாலே, கொடைக்கானலை மாத்திரம் கவனித்து பார்ப்பதற்குத்தான் அந்த அலுவலகம் இப்பொழுது ஏற்பட இருக்கிறது. அதைப் போலவே, தேனி பகுதியிலேயே மிகப் பெரிய அளவிலே சுமார் 600 சதுர கிலோமீட்டர் அளவுக்குக் காடுகளும் மலைப் பகுதிகளும் இருக்கிற காரணத்தினால், தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்ட வனத்துறை அலுவலகம் அமைக்க வேண்டுமென்கிற செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.